Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

TUESDAY, JULY 01 2025

செவ்வாய்க்கிழமை 01, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 273 | பக்கம்:06 | நகரப்பதிப்பு ★ | FREE



# நோர்வூட் பிரதேச சபையில் குழப்பம்

## சுயாதீனமாக இயங்க அறுவர் முடிவு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் உட்பட 6 உறுப்பினர்கள் சுயாதீனமாக செயல்பட முடிவு செய்துள்ளனர்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள், தவிசாளர் மற்றும் தேசிய மக்கள் சக்தியிலிருந்து சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 6 உறுப்பினர்களும் இனிமேல் சுயாதீன உறுப்பினர்களாகச் செயல்பட முடிவு செய்துள்ளதாகக் கூறினர்.

மத்திய உள்ளூராட்சி ஆணையர் திருமதி சாமிலா அத்தபத்து தலைமையில், பொகவந்தலாவை-டின்சினில் உள்ள உள்ளூராட்சி மன்றத்தின் மண்டபத்தில், தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம், வெள்ளிக்கிழமை (27) அன்று நடைபெற்றது.

சபையின் முன்னாள் தவிசாளர் கணபதி குழந்தைவேல் ரவியின் பெயரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்மொழிந்தபோது, தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினர் அந்தக் கட்சியின் உறுப்பினரான பிரான்சிஸ் எலனின் பெயரை முன்மொழிந்தார்.

தொடர்ச்சி P2



# C4 வெடிபொருள் சிக்கியது

C4 என்ற ஒரு அதிக சக்தி வாய்ந்த வெடிபொருட்களை ஏற்றிச் சென்ற லொறியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். ஹபரணை–திருகோணமலை பிரதான வீதியில் வைத்து கைப்பற்றியுள்ளனர்.

ஹதரஸ் கொட்டுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் வழக்கமான சோதனையின் போது வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது, ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் உள்ள டேஷ்போர்டுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த C4 என்ற அதிக வெடிக்கும் பொருள் கொண்ட ஒரு பையைக் கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட வெடிப்பொருள்பொடியின் எடை 156.07 கிராம். சம்பவம் தொடர்பாக லொறி சாரதி கைது செய்யப்பட்டார்.

C-4 என்ற ஒரு அதிக சக்தி வாய்ந்த வெடிபொருள் என்றும், அங்கீகாரம் இல்லாமல் அத்தகைய பொருட்களைக் கொண்டு செல்வது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# "அரசியல் நிகழ்ச்சி நிரலில் கைதுகளை செய்யாதீர்கள்"

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விடவும் இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளைக் குறைவின்றியும் சிறப்பாகவும் நிறைவேற்றுகிறது என்று தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பியான நாமல் ராஜபக்ஷ, அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து கொண்டு கைதுகளை முன்னெடுக்காதீர்கள் எனவும் அரசிடம் கோரியுள்ளார்

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (29) அன்று இடம்பெற்ற அரச நிதி மூலோபாய கூற்று வெளிப்படுத்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "கைது செய்கையில் துடிக்கின்றார்கள்"

அரசாங்கம் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று கடந்த மாதங்களில் குற்றஞ்சாட்டியவர்கள் ஊழல்வாதிகளைக் கைது செய்யும் போது, அரசியல் பழிவாங்கல் என்று துடிக்கின்றார்கள் என இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (29) அன்று இடம்பெற்ற அரச நிதி மூலோபாய கூற்று வெளிப்படுத்தல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், எதிர்க்கட்சியினர் எதிர்க்கட்சி என்பதால் அனைத்தையும் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ச்சி P2



### மின்சார (திருத்தச்) சட்டமூலத்தில்

# சில பிரிவுகள் முரணானவை

இலங்கை மின்சார (திருத்தச்) சட்டமூலத்தின் பல பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவை.இந்த பிரிவுகளை நடைமுறைப்படுத்துவதானால் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை ஆதரவை பெற்றுக்கொள்வதுடன், சர்வஜன வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என உயர்நீதிமன்றம் வியாக்கியானமளித்துள்ளதாக பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி சபைக்கு அறிவித்தார்.

தொடர்ச்சி P2

# "நகைகள் வந்ததை தான் அறிவேன்"

15 வருடங்களாக வெளிப்படுத்தப்படாது திடீரென ஊடகங்களில் காண்பிக்கப்பட்ட தங்க நகைகள் எங்கிருந்து வந்தவை என்பது தொடர்பில் தான் அறிவேன் என்றும் அவை இலங்கையில் இருந்தவை அல்ல என்றும் யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (29) அன்று இடம்பெற்ற அரச நிதி மூலோபய கூற்று தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

323 கொள்கலன்கள் தொடர்பில் நான் கதைத்திருந்தேன். இந்நிலையில், என்னை நீக்குமாறு எனக்கு எதிராக வழக்கொன்றும் உள்ளது. அதனை நான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கின்றேன்.

எவ்வாறாயினும், என்னிடம் தகவல்கள் உள்ளன. அந்த கொள்கலன்களின் என்ன இருந்தது என்று என்னால் பட்டியலொன்றை வழங்க முடியும். எந்த நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டது என்றும் தெரியும்.

தொடர்ச்சி P2



# "செம்மணிக்கு வோல்கர் டர்க்கை நானே அழைத்துச் சென்றேன்"

யாழ்ப்பாணம் சென்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணிக்குச் செல்வதைத் தவிர்க்க முயன்ற போது, நானே அவருடன் பேசி அவரை அங்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்தேன் என்று யாழ். மாவட்ட சுயேச்சைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (29) அன்று இடம்பெற்ற அரச நிதி மூலோபய கூற்றுத் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

செம்மணி மனித புதைகுழியில் இருந்து யுனிசெப் பையுடன் 6 வயது சிறுவனின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புரிந்து கொள்ளுங்கள் 6 வயது சிறுவன் மற்றும் 3 மாத குழந்தையும் அங்கே புதைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பேருந்து சில்லில் சிக்கி சிறுவன் பலி

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதியில் அமைந்துள்ள பிரபல தனியார் ஆடை தொழிற்சாலை ஒன்றுக்குச் சொந்தமான பேருந்தின் பின் பக்க சில்லுக்குள் சிக்கி மூன்று வயதுடைய சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (30) காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுவன் தனது தாயுடன் ஆடைத் தொழிற்சாலைக்கு வந்த நிலையில் தொழிற்சாலைக்குள் தாய் சென்றபோது பின்னால் வந்த சிறுவன் மீது பேருந்தின் டயர் ஏறி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக சிறுவன் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 5 வயது சிறுமி வன்புணர்வு: 51 வயதான நபர் கைது

குருவிட்ட பொலிஸ் பிரிவின் தேவிபஹல பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய திருமணமான ஒருவர், ஐந்து வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டதாக குருவிட்ட பொலிஸார் திங்கட்கிழமை (30) அன்று தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபருக்கு நிரந்தர வேலை இல்லை, கூலி வேலை செய்து தனது வாழ்க்கையை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாதிக்கப்பட்டவரின் பக்கத்து வீட்டில் அவர் வசித்து வருகிறார்.

சிறுமி தனது வீட்டில் தனியாக இருந்தபோது பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மீனின் அலகு குத்தியதில் மீனவர் மரணம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்





ஆழ்கடலில் வைத்து மீனின் அலகு குத்தியதில் ஏற்பட்ட காயத்தினால் ஒருவர் மரணம் அடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாழைச்சேனை துறைமுகத்தில் இருந்து கடந்த 24.06.2025 அன்று ஆழ்கடலுக்குத் தொழிலுக்காக மூன்று பேர் படகில் சென்றுள்ளனர்.

அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (29) அன்று மீன் பிடித்துக் கொண்டு இருக்கும் போது, வலையில் சிக்கிய பெரிய மீனைத் தூக்குவதற்குக் காலை 10.30 மணியளவில் முயற்சி செய்யும் வேளையில் மீனவர் ஒருவர் தவறி கடலில் விழுந்துள்ளார். அந்த மீனின் அலகு வயிற்றுப் பகுதியில் குத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# 'பொடி சஹ்ரான்' விடுதலை

கடந்த 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக முன்னர் கைது செய்யப்பட்ட ஒருவர், கொழும்பு பம்பலப்பிட்டியில் நடைபெற்று வரும் தாவூதி போஹ்ரா சமூகத்தின் ஆன்மீக மாநாட்டை படம்பிடித்ததைக் கண்ட பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'பொடி சஹ்ரான்' என்றும் அழைக்கப்படும் 27 வயதான முகமது ஷஃப்ரூல் என அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர், ஒரு மத நிகழ்வின் போது போஹ்ரா மசூதிக்கு அருகில் வீடியோ காட்சிகளைப் பதிவு செய்து கொண்டிருந்தபோது பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தனது கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி மசூதியைச் சுற்றியுள்ள பகுதியையும் அருகிலுள்ள ரயில் நிலையத்தையும் படம் பிடித்ததாகக் கூறப்படுகிறது, இது பணியில் இருந்த அதிகாரிகளுக்கு சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்திய தற்கொலை குண்டுதாரிகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் ஷஃப்ரூல், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் (சிஐடி) முன்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைதுக்குப் பிறகு, ஷஃப்ரூல் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும் கண்காணிப்பில் இருந்துள்ளார்.

பொடி சஹ்ரானின் சமீபத்திய நடவடிக்கைகள், ஈஸ்டர் தாக்குதல்களுடன் முன்னர் தொடர்புடைய அதே நபரே இவர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், அவர்களின் தரவுத்தளத்தின் மூலம் அவரது அடையாளத்தை சரிபார்க்க பொலிஸாரைத் தூண்டியுள்ளது.

தற்போது அவர் மேலதிக விசாரணைக்காக சி.ஐ.டியிடம் ஒப்படைக்கப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நோர்வூட் பிரதேச சபையில் குழப்பம்

தவிசாளர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக இரண்டு பெயர்கள் முன்மொழியப்பட்டதால், தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்காகத் திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியிலிருந்து முன்மொழியப்பட்ட பிரான்சிஸ் எலன் 12 வாக்குகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே நேரத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து தலைவர் பதவிக்கு முன்மொழியப்பட்ட கணபதி குழந்தைவேல் ரவி 07 வாக்குகளைப் பெற்றார்.

இந்த நியமனத்தைத் தொடர்ந்து, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீரராச்சி, தேசிய மக்கள் சக்தியால் தேர்ந்தெடுக்கப்பட்ட தவிசாளர் மற்றும் பிற உறுப்பினர்களை கடுமையாக எதிர்த்தார்,

“கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயல்பட அவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை, மேலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடமிருந்து தவிசாளர் பதவியை முன்மொழிபவர்கள், தங்கள் கட்சிக்கு பிரதி தவிசாளர் பதவியைப் பெற ஒப்புக்கொண்டாலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளர் பதவியைப் பெறுவது கட்சியின் ஒழுக்கத்திற்கு எதிரானது” என்று கூறினார்.

நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீராச்சி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்டச் செயலாளர் ஆகியோர் நோர்வூட் போட்றீ தோட்டத்தில் உள்ள தவிசாளரின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.

தவிசாளர் வீட்டில் இல்லாததால், உடனடியாக அழைக்குமாறு தவிசாளரின் மனைவியிடம் கேட்டுக்கொண்டு வீட்டைப் பார்வையிட்ட பிறகு திரும்பி வந்ததாக, தேசிய மக்கள் சக்தியிலிருந்து நோர்வூட் பிராந்திய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திலும், வேறு பல மாவட்டங்களிலும் அரசாங்கத்தை அமைக்கும் தனி அதிகாரம் எந்தக் கட்சிக்கும் இல்லாததால், தேசிய மக்கள் சக்தி கட்சி (NPP) மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC) ஆகியவை அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் அரசாங்கத்தை அமைப்பதற்கான உடன்பாட்டை எட்டியுள்ளன.

இதன் மூலம் நுவரெலியா, கொட்டகலை, அக்கரபத்தனை மற்றும் நோர்வூட் சபைகளின் தவிசாளர் பதவி இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு வழங்கப்படும், மேலும் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதி தவிசாளர் பதவி தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் சில சபைகளின் முன்னாள் தவிசாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், மேலும் நோர்வூட் பிரதேச சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தவிசாளர் உட்பட தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தியின் அதிகாரத்துடன் நோர்வூட் பிரதேச சபை நிறுவப்பட்டுள்ளது.

மேற்படி, தவிசாளர்கள் மற்றும் நோர்வூட் பிரதேச சபைக்கான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர் ஆகியோர் தங்கள் பதவிக் காலத்தில் ஊழல், மோசடி மற்றும் அதிகார துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளானபோது, இதற்கு மாறாக செயல்பட்டது ஏற்றுக்கொள்ள முடியாதது.

நோர்வூட் பிரதேச சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்கள் இதற்கு மாறாக செயல்பட்டது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று கூறுகின்றனர்.

ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பதாகவும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட மக்களுக்கு அதிகபட்ச சேவையை வழங்குவதாகவும், ஏராளமான ஊழல்கள் மற்றும் மோசடிகளைச் செய்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்த ஒருவரை மீண்டும் தவிசாளராக நியமிக்க அனுமதிக்காமல் இருப்பதன் மூலமும் மக்களுக்கு உறுதியளித்ததன் மூலம் நோர்வூட் பிரதேச சபையின் நிர்வாக அதிகாரத்தைப் பெற்றதாகத் தவிசாளரும் உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பிரான்சிஸ் எலன், நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில், நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளராக திங்கட்கிழமை (30) சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டார்.



## “அரசியல் நிகழ்ச்சி நிரலில் கைதுகளை செய்யாதீர்கள்”

அவர் மேலும் பேசுகையில், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து வெளியேறுவோம். ரணில் விக்ரமசிங்கவின் கொள்கை நாட்டுக்குப் பொருத்தமில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ரணில் விக்ரமசிங்கவை விடவும் குறைவில்லாமலும் சிறப்பாகவும் செயற்படுத்துகின்றார்கள். கட்டம் கட்டமாக வரிகளை அதிகரிக்கிறார்கள்.

தேர்தல் காலத்தில் முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு மாறாகவே இந்த அரசாங்கம் தற்போது செயற்படுகிறது, தனிமனித பொருளாதார மேம்பாட்டை அதிகரிப்பதற்கும், தொழிற்றுறையை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் இதுவரையான காலப்பகுதியில் முன்னெடுத்த செயற்திட்டங்கள் என்ன? சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையை பலப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? ஆட்சிக்கு வந்ததன் பின்னரும் கடந்த காலங்களைப் போன்று 75 ஆண்டு கால அரசியல் கட்டமைப்பை விமர்சிக்கிறார்கள். ஆனால், எதிர்கால திட்டமிடல் பற்றி எதுவும் எவரும் கூறுவதில்லை. 650 மில்லியன் டொலர் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குக் கிடைத்துள்ளதாக அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார். ஆனால், ஜனாதிபதி 4.6 பில்லியன் டொலர் முதலீடு என்று குறிப்பிடுகிறார்.

ஆனால், முதலீட்டுச் சபையின் தலைவர் ‘ சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்னும் இறுதி தீர்வு எடுக்கப்படவில்லை’ என்று குறிப்பிடுகிறார். ஆகவே யார் குறிப்பிடுவது உண்மை? வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பான திட்டங்களைக் கனவுலகில் இருந்து கொண்டா தயாரிக்கின்றீர்கள்?

அரசாங்கமும் அமைச்சர்களும் முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டுக் கொள்ளும் நிலையில்தான் தேசிய தொழில் துறைகள் மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரசாங்கத்தின் குறைபாடுகளை மறைத்துக் கொள்வதற்காகவே அரச அதிகாரிகள் இன்று நெருக்கடிக்குள்ளாகப்பட்டுள்ளார்கள்.

அரச சேவையின் மீது அரசாங்கத்துக்கு நம்பிக்கை கிடையாது.இதனால் தான் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதியமைச்சில் முக்கிய பதவிகள் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதுன . அரசியல் நிகழ்ச்சி நிரலில் இருந்து கொண்டு கைதுகளை முன்னெடுக்காதீர்கள் என்றார்.

## சில பிரிவுகள்...

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை(30) அன்று இடம்பெற்ற விசேட அமர்வின் போது இலங்கை மின்சார (திருத்தச் ) சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை சபைக்கு அறிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த பிரதி சபாநாயகர் மேலும் கூறுகையில்,

அரசியலமைப்பின் 121ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார (திருத்தச் ) சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் தொடர்பான வியாக்கியானத்தை உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு சமர்ப்பித்துள்ளது.

சட்டமூலத்தின் 8,(2), 3,31,32 உட்பட பல பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவையாக சுட்டிக்காட்டப்பட்டள்ளது. அரசியலமைப்புக்கு முரண்ன ன்று குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளை நடைமுறைப் படுத்துவதானால் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். குழுவின் உறுப்பினர்கள் 2023 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட வேண்டும் என்று பிரிவு 8(2) திருத்தப்பட வேண்டும். பிரிவு 13(1)(இ) அரசியலமைப்பின் பிரிவு 3 மீறுகிறது இதனை நிறைவேற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், உயர் நீதிமன்றத் தீர்ப்பில் சுருக்கமாகக் கூறப்பட்டபடி அந்தப் பிரிவு திருத்தப்பட்டால், அரசியலமைப்புக்கு முரணான தன்மை நீங்கும். சட்டமூலத்தின் பிரிவு 13(1)(அ) தெளிவற்றதாகவும் தன்னிச்சையாகவும் உள்ளது, ஏனெனில் அது இரண்டாம் கட்ட பல்வகைப்படுத்தலில் ஊழியர்களின் பரிமாற்றம் மற்றும் ஊழியர்களின் உரிமைகள் தொடர்பான எந்த விதியையும் கொண்டிருக்கவில்லை. எனவே, இந்தப் பிரிவு அரசியலமைப்பின் பிரிவு 14(1)(எ) ஐ மீறுகிறது.

மேலும், அரசியலமைப்பின் பிரிவு 84(2) இன்படி சிறப்பு பெரும்பான்மை வாக்குகளால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும். இருப்பினும், உயர் நீதிமன்றத் தீர்ப்பின் சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்கூறிய பிரிவு திருத்தப்பட்டால், அரசியலமைப்பு முரண் நீக்கப்படும். அரசியலமைப்புக்கு முரண் என்று நீதிமன்ற த்தால் மேற்கோள்கா ட்டப்பட்டுள்ள பிரிவுகளை அரசியலமைப்பின் பிரிவுகளுக்கு அமைவாக திருத்தம் செய்தால் அரசியலமைப்புக்கு முரணான தன்மை நீங்கும் அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் மன்றத்தில் சாதாரண சட்டமூலத்தை நிறைவேற்றலாம் என்றார்.

## “நகைகள் வந்ததை தான் அறிவேன்”

ஜேர்மனியில் இருந்து வந்துள்ளது என்ற பட்டியலையும் நான் பார்த்துள்ளேன். அந்த பட்டியலை வழங்கிய பின்னர் என்னை எம்.பி. பதவியில் இருந்து நீக்கி போதைப்பொருள் குற்றச்சாட்டில் உள்ளே போட மாட்டார்கள் என்பதனை உறுதிப்படுத்தச் சொல்லுங்கள்.

வேண்டுமென்றால் அந்த கொள்கலன்களில் என்ன இருந்தது என்பதனை சபைக்கு ஆற்றுப்படுத்தவும் தயாராக இருக்கின்றேன். அந்த 323 கொள்கலன்களில் என்ன இருந்தது என்பதனை பயமின்றி என்னால் கூற முடியும்.

இதேவேளை, தங்க நகைகள் எங்கிருந்து வந்தது. 15 வருடங்களாக வெளியில் வராத தங்க நகைகள் திடீரென வெளியில் வந்து ஊடகங்களில் காண்பிக்கப்பட்டது.

இது எங்கிருந்து வந்தது. அவை எமது நாட்டில் இருந்த வந்தவை அல்ல. வேறு இடங்களில் இருந்தே கொண்டு வரப்பட்டுள்ளது. அது தொடர்பான முழுமையான தகவல்களைக் கூற முடியும். ஆனால் எனக்குப் பயமும் உள்ளது. சாகப் பயமில்லை. ஆனால், என்னை இவர்கள் தேவையில்லாத வழக்கில் கொண்டு செல்லலாம் என்றார்.

## “செம்மணிக்கு வோல்கர் டர்க்கை நானே அழைத்துச் சென்றேன்”

இதுவரையில் அங்கிருந்து 33 எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. நாங்கள் இராணுவத்தினரை மதிக்கின்றோம். ஆனால், ஆயுதம் வைத்திருக்கும் அனைவரும் இராணுவம் அல்ல. அங்கிருந்த தாயையும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி 3 மாத குழந்தையும் துஷ்பிரயோகம் செய்து அவர்களை மூன்று அடி ஆழத்திலேயே புதைத்துள்ளனர்.

தாய் குற்றுயிராய் இருக்கும் போது, மூன்றடி ஆழத்தில் போட்டு குழந்தையை நெஞ்சில் போட்டுள்ளனர். அந்த எலும்புக்கூடு குழந்தையைக் கட்டியணைத்தவாறுதான் இருக்கின்றது. அந்த வலியையே நாங்கள் வெளியில் கூறுவதற்கு முயற்சிக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, அங்கிருந்து அவரை வெளியேற்றுவதற்கு வாகனங்கள் தயார் செய்யப்பட்டது.

ஆனால், நான் போய் கதைத்து 15ஆயிரம் மக்கள் அழுகின்றார்கள் வந்து பாருங்கள் என்று கூறியே அவரை அங்கு அழைத்துவர முடியுமாக இருந்தது.

அன்று அமைச்சர் சந்திரசேகர் செருப்பு இன்றி ஓடினார். அவருடைய செருப்பு இப்போதும் எனது காரில் இருக்கின்றது. வந்து எடுத்துக்கொள்ளலாம். இந்த பாராளுமன்றத்தில் இராமநாதன் அர்ச்சுனாவை அடித்து விரட்டுவார்கள் என்று கூறிய சந்திரசேகர், ரஜீவன் ஆகியோரை தமிழ் மக்கள் அடித்துத் துரத்தியுள்ளனர் என்றால் அது மனதில் உள்ள வலியே. எங்களின் வலிகளைப் புரிந்துகொள்ளுங்கள் என்றே மக்கள் கேட்கின்றேன்.

இந்த நாடு இரண்டாகப் பிளக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கவில்லை. மக்களைக் கொலை செய்திருந்தால் அவர்களை மட்டும் நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும் என்றே கூறுகின்றனர்.

நாமல் ராஜபக்ஷ எனது நண்பன் என்று கூறியதை அவர் எனது நண்பர் என்று மற்றையவர்கள் கூறுகின்றனர். ஆம்! அவர் எனது அரசியல் நண்பரே. அவருடன் கதைக்காமல் போக முடியாது.

ஆனால், ஒரு காலத்தில் எமது தமிழ் மக்களை கொலை செய்தமைக்கு அவரின் தந்தை பொறுப்புக்கூற வேண்டும். எனது தந்தையும் இங்கே இல்லாமல் போயுள்ளார் என்றார்.

## மீனின் அலகு குத்தியதில் மீனவர் மரணம்

பலத்த காயத்துடன் படகில் ஏறியவர் தன்னை மீன் குத்தி விட்டதாகவும் வலி அதிகமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏனைய இருவரும் அவரை கரைக்குக் கொண்டுவரும் நோக்கில் கரைக்கு வரும் வழியில் மதியம் 12 மணியளவில் அவரது உயிர் பிரிந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (29) அன்று இரவு 11 மணியளவில் இறந்தவரின் உடல் வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தை வந்தடைந்தது.

மரணமடைந்தவர் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் பாலைநகர் ரஹ்மானிய ஜும்மாஆ பள்ளி வீதியைச் சேர்ந்த மீரா லெப்பை சஹாப்தீன் (வயது 47) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸாரும் மீன்பிடி துறைமுக கரையோர பாதுகாப்பு படையினரும் நடத்தி வருகின்றனர்.

## “கைது செய்கையில் துடிக்கின்றார்கள்”

அமெரிக்காவின் புதிய அரசாங்கம் இலங்கை நாடுகள் உட்பட உலக நாடுகளுக்குப் பரஸ்பர தீர்வை வரி விதித்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் மகிழ்ச்சியடைந்தார்கள். இந்த வரி விதிப்பால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும் என்று எண்ணினார்கள் . ஆனால் அவர்கள் குறுகிய அரசியல் நோக்கம் மற்றும் எதிர்பார்ப்பு வெற்றி பெறவில்லை.

ஈரான் - இஸ்ரேல் பிரச்சினையைத் தொடர்ந்து இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று எதிர்க்கட்சியினர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சிகளுக்கு சார்பாகச் செயற்படும் ஊடகங்கள் பெரிதுபடுத்தின. இந்த நெருக்கடியையும் சிறந்த முறையில் எதிர் கொண்டுள்ளோம்.

இலங்கைக்கு எவ்வித வெளிநாட்டு முதலீடுகளும் வரவில்லை என்று குற்றஞ்சாட்டுபவரின் மாமனார் ஸ்ரீலங்கன் விமானச் சேவைகள் நிறுவனத்தில் செய்த ஊழல் மோசடிக்கு தற்போது சிறையில் உள்ளார். ஊழல்வாதிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டியவர்கள் ,ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் பழிவாங்கல் என்று துடிக்கின்றார்கள் ஆனால், நாம் நிச்சயம் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுப்போம் என்றார்.

## ‘பொடி சஹ்ரான்’ விடுதலை

ஷஃப்ரூல் கண்டியிலிருந்து கொழும்புக்கு பயணம் செய்ததாகவும், மதக் கூட்டத்தின் போது போஹ்ரா மசூதிக்கு அருகில் இருந்ததாகவும் புலனாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் காவலில் இருப்பதாகவும் சிஐடி உறுதிப்படுத்தியுள்ளது.

விசாரணையின் போது, திருப்திகரமான விளக்கத்தை அவர் வழங்கத் தவறியதாகக் கூறப்படுவதால், அவரது சமீபத்திய செயல்களுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தை அதிகாரிகள் இன்னும் கண்டறியவில்லை.

அவர், கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, முன்னிலையில், திங்கட்கிழமை (30) மாலை ஆஜர்படுத்தப்பட்டபோதே விடுதலை செய்ய மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## 5 வயது சிறுமி வன்புணர்வு: 51 வயதான நபர் கைது

இதனையடுத்து, சந்தேக நபர் குருவிட்ட பொலிஸ் மகளிர் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன்புணர்வு செய்யப்பட்ட சிறுமி தற்போது இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவித்த பொலிஸார், சந்தேநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மற்றும் அமெரிக்காவின்

# கூட்டு அறிக்கை எங்கே?



அமெரிக்க ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட பரஸ்பர தீர்வை வரி தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இறுதி தீர்மானம் தொடர்பில் இலங்கை மற்றும் அமெரிக்கக் கூட்டு அறிக்கையை வெளியிடும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க குறிப்பிட்டார். அந்த கூட்டு அறிக்கை எங்கேயென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் எம்.பியுமான கயந்த கருணாதிலக கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (30) அன்று இடம்பெற்ற அரச நிதி மூலோபாய கூற்று வெளிப்படுத்தல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நாடு வங்குரோத்து நிலையடைந்தமைக்கு எதிர்க்கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும் என்று அரச தரப்பினர் கூறுகின்றனர். நாடு வங்குரோத்து நிலையடைந்த போது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் ஆகியோர் எதிர்க்கட்சியில் தான் இருந்தார்கள், அவ்வாறானால் அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.

வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழ சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைக் கடந்த அரசாங்கம் பெற்று முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த அரசாங்கமும் அந்த நிபந்தனைகளைச் செயற்படுத்துகிறது.

தொங்கு பாலத்தில் செல்ல வேண்டிய நிலை தான் காணப்படுகிறது. ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளில் இருந்து விலகினால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என்பதை நாங்களும் நன்கு அறிவோம்.

அரசாங்கம் இந்த 9 மாத காலப்பகுதியில் பிரபல்யமாக எடுத்த திட்டங்கள் அனைத்தும் காணாமல் போயுள்ளன. க்ளீன் ஸ்ரீ லங்கா திட்டம், காட்டு விலங்கு கணக்கெடுப்பு ஆகியவற்றுக்கு நேர்ந்தது என்னவென்பது மறைக்கப்பட்டுள்ளது என்றார்.



## மு.கா. அமைப்பாளராக நாசர் நியமனம்

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்ட, காரைதீவு பிரதேச மாளிகைக்காடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளராக எம்.எச்.நாசர் நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் மூலம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலம் நேரடி அரசியலுக்கு வந்தார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு பிரதேசத்தின் முதலாவது அமைப்பாளராக மறைந்த கட்சியின் தவிசாளர் முழக்கம் மஜீட் பணியாற்றினார்.

அவரைத் தொடர்ந்து, 25 வருடங்களாக தற்போதைய காரைதீவு பிரதேச சபையின் உபதவிசாளர் எம்.எச்.எம். இஸ்மாயில் அமைப்பாளராக பணியாற்றி வந்தார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 23 சொற்ப வாக்குகளில் நாசர் மாளிகைக்காடு கிழக்கில் தோல்வியுற்றார்.

மாளிகைக்காடு பிரதேசத்தில் பல அமைப்புகளில் தலைவராக இருந்து சமூக சேவையில் ஈடுபட்டு வரும் நாசர் இன நல்லுறவுக்காக பாடுபட்டதற்காக காரைதீவு பிரதேச செயலகத்தால் 'விபுல நேசன்' என்ற பட்டத்துடன், 2009இல் கௌரவிக்கப்பட்டவராவார்.

## காதலனை தாக்கிய காதலி கைது

சில நாட்களுக்கு முன்னர் டிக்டொக் செயலி ஊடாக நண்பர்களாகி பின்னர் காதலர்களாகிய பின்னர் காதலனைத் தாக்கிய காதலி கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த காதலன் காதலியிடம் இருந்த தங்க மோதிரத்தை வாங்கி சென்றுள்ளார். அதை மீண்டும் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார். இதனால் கோபமடைந்த காதலி, இன்னும் சிலருடன் இணைந்து காதலனைத் தாக்கி, மோதிரத்தை கொள்ளைவிட்டுச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் காதலி உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெலிகட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் காதலியின் நெருங்கிய நண்பி, அந்த நண்பியின் காதலனும் அடங்குவர்.

காதலன் மீது சந்தேக நபர்கள் தாக்குதல்களை மேற்கொண்டதன் பின்னர், அவரிடமிருந்து 3,000 ரூபாய் பணம், 150,000 ரூபாய் பெறுமதியான அப்பில் வகை தொலைபேசி, தலைக்கவசம் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர். அத்துடன், மோட்டார் சைக்கிளுக்கு 14,000 ரூபாய்க்கு சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கதிர்காமம் யாத்திரை பஸ் விபத்தில் சிக்கியது

ரீ.எல்.ஜவ்பர்கான்

கதிர்காமம் சென்று திரும்பிய யாத்திரிகர்ளை ஆரையம்பதியில் இறக்கிவிட்டு திரும்பிய பேருந்து கிரான்குளத்தில் விபத்தில் சிக்கியுள்ளது.

மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட கிரான்குளம் பகுதியில் பேருந்து வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதி திங்கட்கிழமை (30) விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

கதிர்காமம் புனித யாத்திரையை நிறைவு செய்த யாத்திரிகர்களை ஆரையம்பதியில் இறக்கி விட்டு மட்டு கல்முனை சாலை வழியே தேற்றாத்தீவு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போதே அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளது.



இந்த விபத்து இடம்பெறும் போது பேருந்தில் பஸ் சாரதியும் உதவியாளர்கள் இருவர் இருந்துள்ள நிலையில் மூவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்தோர் பாண்டிருப்பு களுதாவளை பகுதியை சேர்ந்தவர்களாகும்.

விபத்தில் பேருந்து பாரிய சேதத்துக்குள்ளான நிலையில் வம்மி மரமும் முறிந்து வீதியில் விழுந்துள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் .

## 1,350 கிலோ கிராம் பீடி இலைகள் மீட்பு

எம்.யூ.எம்.சனூன்

கற்பிட்டி, தலவில் கடற்கரை பகுதியில் சட்டவிரோதமாக கடல் மார்க்கமாகக் கொண்டு வரப்பட்ட சுமார் 1,350 கிலோ கிராம் பீடி இலைகள் அடங்கிய 45 பொதிகளை கற்பிட்டி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வலராச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர், இவற்றைக் கைப்பற்றியதுடன் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரண்டு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.



பீடி இலைகளைக் கொண்டு வந்தவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பெற்ரோல் விளக்கு ஏற்றியதால் தீ பரவல்

க.அகரன்

வவுனியா பண்டாரிக்குளத்தில் உள்ள வீடொன்றில் திடீரென தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் சாமி அறையில் விளக்கு ஏற்றுவதற்காகத் தேங்காய் எண்ணெய்யைப் பயன்படுத்துவதற்கு பதிலாகத் தவறுதலாக பெற்ரோலை பயன்படுத்தியமையால் இந்த தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

மேலும், குறித்த வீட்டார் இது தொடர்பாக வவுனியா மாநகர சபையின் தீயணைப்பு பிரிவுக்கு அறிவித்த நிலையில், சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு பிரிவினர் பொதுமக்களின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை



வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தாயை கொன்ற இளைய மகன் கைது

அனுராதபுரம், கல்னேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெலபதுகம பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது இளைய மகன் கல்னேவ பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை(29) கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்னேவ , ஹெலபதுகம பிரதேசத்தில் வசிக்கும் 46 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்னேவ , ஹெலபதுகம பிரதேசத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு பிள்ளைகளின் தாயான பெண் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதுடன் இதன்போது, "தனது தாய் கல்னேவ பிரதேசத்தில் உள்ள நபரொருவருடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்த நிலையில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரிவின் காரணமாக மனதளவில் பாதிக்கப்பட்ட தாய் கிணற்றில் குதித்து உயிரை மாய்த்துக்கொண்டிருக்கலாம்" என இளைய மகன் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரேதப் பரிசோதனையின் போது தாயின் தலையில் பலத்த காயங்கள் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில், தாயின் இளைய மகன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆறு கோடி ரூபாய் பெறுமதியான

## தொலைபேசிகளுடன் நபர் ஒருவர் கைது

டீ.கே.ஜீ.கபில

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள 'கிரீன் சேனல்' வழியாக சுமார் 6 கோடி ரூபாய் பெறுமதியுடைய கையடக்கத் தொலைபேசிகள், டேப்லெட் கணினிகள் மற்றும் கணினிகள் 238 தொகையைக் கொண்டு வந்த பயணி ஒருவர், கைது செய்யப்பட்டுள்ளார்.



சந்தேக நபர் அவிசாவளை பிரதேசத்தைச் 22 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

குறித்த நபர் திங்கட்கிழமை(30) அதிகாலை துபாயில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ள நிலையில் அவரின் பயணப் பையைச் சோதனையிட்ட போது குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## முடக்கல் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

செந்தூரன் பிரதீபன்

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்ட விரோத அத்துமீறிய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இ.போ.ச. துறைசார் தரப்பினருக்கு உறுதி வழங்கியதன் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை (01) முன்னெடுக்கவிருந்த சேவை முடக்கல் ஆர்ப்பாட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டதாக வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் சிவபரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண வீதிகளில் நடைபெறும் சட்ட விரோத செயற்பாடுகளைக் கண்டித்தும், அவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி தனியார் பேருந்துகளின் பாதுகாப்பான சேவையை உறுதி செய்வதற்காகவும் செவ்வாய்க்கிழமை(30) வடக்கில் சேவை முடக்கல் ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என கடந்த வாரம் அறிவிக்கப்பட்டிருந்தது.



ஆனால், தற்போது இ.போ. சபை, வடக்கின் ஆளுநர் மற்றும் துறைசார் தரப்பினர் இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதென்று வழங்கிய உத்தரவாதத்தின் அடிப்படையில் குறித்த ஆர்ப்பாட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

முன்பதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற கால அட்டவணைக்கு முரணான சேவையொன்றால் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து.

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் இ.போ.ச. தரப்பினரிடையே குழப்ப நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து, பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

## ஒவ்வாமையினால் 22 மாணவர்கள் பாதிப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, கரடியனாறு இந்து வித்தியாலத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக வயிற்று வலி ஏற்பட்ட நிலையில், 22 மாணவர்கள் திங்கட்கிழமை(30) அன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பாடசாலையில் சோறுடன் கோழி இறைச்சி கறி தயாரித்து



திங்கட்கிழமை (30) பகல், 195 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதைச் சாப்பிட்ட மாணவர்களுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து, அவர்களை உடனடியாக அருகில் உள்ள கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், 16 மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குறித்த உணவைப் பரிசோதனை செய்ததுடன், வழங்கப்பட்ட கோழி இறைச்சி பனிக்கட்டியில் இருந்து எடுத்துத் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

**வாடகைக்கு**

கல்கிசை டெம்பிள்ஸ் வீதியில், 3 படுக்கையறைகள் (ஒன்று ஏ.சி. வசதியுடன்), 2 கழிப்பறைகள், வேலையாட்கள் அறை, கழிப்பறை, கேரேஜ், சிறிய தோட்டம், கொண்ட ஒற்றை கட்டிடம், வீடு, மாதாந்தம் 75,000 – 80,000 வாடகைக்கு உள்ளது.

தொடர்புகொள்ளவும்: 077-768 8144

## 3 சிறுமிகள் வன்புணர்வு: மென் பொறியியலாளர் கைது

ஒரே பாடசாலையில் படிக்கும் 3 மாணவிகளை தனது ஆடம்பர வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் 30 வயது திருமணமான மென்பொருள் பொறியியலாளரை கைது செய்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் கூறுகின்றனர்.

பாலியல் வன்புணர்வுக்கு ஆளான 13 மற்றும் 16 வயதுடைய சிறுமிகளை மருத்துவ பரிசோதனைக்காக ஹொரணை மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுமிகளை கடத்துவதற்காக வீட்டிற்கு அழைத்துச் செல்ல பயன்படுத்திய சொகுசு காரையும், அவர்களை அவ்வாறு செய்ய கவர்ந்திழுக்க அவர் பயன்படுத்திய ஸ்மார்ட்போனையும் சந்தேக நபரிடமிருந்து பொலிஸார் பறிமுதல் செய்துள்ளார்.

16 வயது சிறுமியை பாடசாலைக்கு நடந்து சென்றுக்கொண்டிருந்த போது, அந்த மாணவிக்கு உதவுவதாகக் கூறி தனது காரில் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவளுடன் நட்பு கொண்டு, மதியம் யாரும் இல்லாதபோது மூன்று முறை தனது வீட்டிற்கு மதியவேளையில் அழைத்துச் சென்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம், ஒரு வருடத்திற்கு முன்பு இடம்பெற்றுள்ளது.

சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு, இந்த பெண் தான் படிக்கும் அதே பாடசாலையில் எட்டாம் வகுப்பு படிக்கும் ஒரு பெண்ணை அழைத்து, "உனக்கு ஒரு காதலன் இருக்கிறானா?" என்று கேட்டாள். அவள் இல்லை என்று சொன்னபோது, எனக்கு ஒரு காதலன் இருக்கிறான். "நான் உன்னை அறிமுகப்படுத்தட்டுமா?" அந்த நேரத்தில், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண் தன்னிடமிருந்த சந்தேகநபரின் புகைப்படத்தைப் பார்க்கச் சொல்லியுள்ளார்.

அதன்படி, 16 வயது சிறுமி, 13 வயது சிறுமியின் தாயாரின் அலைபேசிக்கு வாட்ஸ்அப் மூலம் சந்தேக நபரின் புகைப்படத்தை அனுப்பினாள், அதற்கு அந்தப் பெண் சம்மதித்து, "எனக்கு அவனைப் பிடிக்கும்" என்று கூறியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாட்ஸ்அப் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட பிறகு, கடந்த வெள்ளிக்கிழமை (27) ஒருவரையொருவர் சந்திக்க முடிவு செய்தனர். சந்தேக நபருடன் தொலைபேசியில் தொடர்பில் இருந்த 13 வயது சிறுமி, இது குறித்து தனது தோழியிடம் தெரிவித்து, அவளுடன் தனது காதலனைச் சந்திக்கச் செல்ல ஒப்புக்கொண்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

அங்கு, சந்தேக நபர் இரண்டு சிறுமிகளையும் தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறார்கள்

சிறுவர் என்பது பெற்றோரின் அதிகபட்ச அன்பு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பைப் பெறத் தகுதியானவர் மற்றும் சமூகத்தின் பாதுகாப்பைப் பெற உரிமையுள்ளவர்.

தற்போது, பல சிறுவர்கள், தங்களின் குழந்தைப் பருவத்தில் அவர்களுக்குத் தேவையான அன்பு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பையும், தேவையான வசதிகளையும் பெறுவதில்லை. அதன்படி, தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் பரவலாக உள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 2024ஆம் ஆண்டில் 304 பேர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஐந்து வயது சிறுமி 51 வயதான நபரினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள சம்பவம் குருவிட்டவில் இடம்பெற்றுள்ளது. பாடசாலை மாணவிகளான சிறுமிகள் மூவரைத் துஷ்பிரயோகம் செய்த 30 வயது திருமணமான மென்பொருள் பொறியாளரை மொரகஹஹேனயில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்ரின் பொறுப்பில் உள்ள பாதுகாவலர்களால் ஒரு சிறுவர்களைக் கைவிடுதல், துன்புறுத்தல், புறக்கணிப்பு மற்றும் தாக்குதல் என வரையறுக்கப்படுகிறது. குழந்தையின் முதன்மை பாதுகாவலர் சிறுவரின் பெற்றோரிடம் உள்ளது. இருப்பினும், பாதுகாவலர் என்பது பெற்றோருக்கு மட்டுமே பிரத்தியேகமானது அல்ல. சில சிறுவர்கள் சட்டப்பூர்வமாகப் பெற்றோர் இல்லாமல் வேறொருவரிடம் ஒப்படைக்கப்படுகிறார்கள்.

சிலருக்குத் தற்காலிக பாதுகாவலர் பொறுப்பு வழங்கப்படுகிறது. உதாரணமாக, சிறுவர்கள் படிக்கும் மேலதிக வகுப்பில், அந்தப் பாதுகாவலர் பொறுப்பு அந்த தற்காலிக பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறுவர் பாடசாலைக்குச் செல்லும் பாடசாலை வேனில், அந்தப் பாதுகாவலர் பொறுப்பு பாடசாலை வேன் ஓட்டுநர் அல்லது அந்தப் பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற அனைத்து இடங்களும் இந்தக் சிறுவரின் தற்காலிக பாதுகாவலர் பொறுப்பு ஆகும்.

சிறுவர் துஷ்பிரயோக செயல்முறை மிகவும் சிக்கலானது. ஒரு சிறுவர் வேண்டுமென்றே தாக்குதல், மோசமாக நடத்துதல், புறக்கணித்தல் மற்றும் கைவிடப்படுதல் மூலம் உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளாக நேரிடும்.

இதற்கிடையில், சிலர் சிறுவர்களை மன ரீதியான துஷ்பிரயோகத்திற்கும் ஆளாக்குகிறார்கள். உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்குக் கூடுதலாக, அவர்கள் சிறுவர்களை மன ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்குகிறார்கள். மிரட்டல், அச்சுறுத்தல்கள், கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துதல் மற்றும் சிறுவர்களைத் தனிமைப்படுத்துதல் போன்ற காரணங்களால், சிறுவர் மன ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுகிறது.

மிகவும் கடுமையான துஷ்பிரயோகம் பாலியல் துஷ்பிரயோகம் ஆகும். சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தல், ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தல், ஆபாசமான புகைப்படங்கள் அல்லது வீடியோக்களை எடுத்தல் போன்றன. பெரியவர், நபர் அல்லது குழுவால் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதாகும்

சிறுவர்கள் தொடர்பான ஆபாசமான பதிவுகள் அல்லது காட்சிகள், சிறுவர்களைப் பிச்சை எடுக்கவோ அல்லது பிச்சை எடுக்கவோ தூண்டுதல், பாலியல் உடலுறவுக்காகக் குழந்தைகளை விபசாரிகளாக (விபச்சாரிகள்) பணியமர்த்தல் அல்லது பணியமர்த்தல் மற்றும் சிறுவர்களை மன அல்லது உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல் ஆகியவற்றையும் குறிப்பிடுகிறது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஒருவரது ஆற்றாமை மற்றையோருக்குத் தெம்பு ஊட்டுவதாக அமையலாகாது. எங்கே ஓர் அப்பாவி விழுகின்றான் என்பதை எதிர்பார்க்கும் நபர்கள் இருக்கின்றார்கள்.

ஒருவரது பலவீனத்தின் மூலம், தாங்கள் பலமானவர்களாக முடியும் என எண்ணுவதே துரோகம். முயற்சி செய்யாமல் தட்டிப்பறிக்க எண்ணும் கூட்டங்கள் ஒருபோதும் சுய பலத்தை, நம்புவதும் இல்லை. துர் குணங்களைக் கைவிடுவதுமில்லை.

ஒழுக்கக்கேடான செயல் உழைப்பதற்கு எளிதான காரியம் என்று எண்ணுபவர்கள். நியாய தர்மங்களை உபதேசங்கள் செய்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

பலவீனமான குணங்களுடன் வாழும் நபர்கள், அதனை ஒருபோதும் ஒத்துக்கொள்வதுமில்லை. துணிச்சலுடன் எழுச்சியும் நெஞ்சினுள் வீரமும் அவசியம்.

திறமையான விளையாட்டு வீரர்கள் கூட, சில சமயம், தன்னுடன் போட்டியிடுபவர்கள் தன்னை வென்று விடுவார்களோ என எண்ணக்கூடாது. போட்டியில் விட்டுக்கொடுத்தல் கூடாது. துணிச்சலற்றவர்களை வீழ்த்திவிட இரக்கமற்றவர்கள் காத்திருக்கின்றார்கள்.

– பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### நிழல்குடையால் அசௌகரியம்

அம்பாறை, நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பொலிஸ் நிலையத்திற்கு அருகில் காணப்படும் பேருந்து நிறுத்த நிழற்குடை உரிய பராமரிப்பு இன்றி காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், குறித்த நிழற்குடை நீண்ட காலமாக எவ்வித பராமரிப்பு இன்றி கூரை உட்பட அதன் இருக்கைகளும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் பயன்படுத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பிரதான வீதியில் அக்கரைப்பற்று, கல்முனை பேருந்து வரும் வரை காத்திருக்கும் வேளைகளில் பறவைகளின் எச்சங்கள் மற்றும் விசப்பாம்புகளின் அச்சுறுத்தலும் ஏற்படுகின்றது.

மேலும், இந்த நிழற்குடையில் கால்நடைகளும் தங்கும் இடமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் குறித்த நிழற்குடை உள்ள இடத்தில் இருந்து பொதுமக்கள் பயணம் மேற்கொள்ளுவதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

தற்போது அதிக வெயில் காலம் என்பதனால் இதன் கூரைப்பகுதி மற்றும் நிழற்குடையின் சுற்றுச் சூழலை உடனடியாக திருத்தம் செய்து தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பாறுக் ஷிஹான்

# முஸ்லிம் சமூகத்தின் அடுத்த தலைமை யார்?

மொஹமட் பாதுஷா

தலைமைத்துவம் என்பது ஒரு சமூகத்தின், நாட்டின் மிகப் பெரிய பொறுப்பாகும். இலங்கைச் சூழலில் சமூக, சமய, அரசியல் தலைமைத்துவங்கள் எந்தளவுக்கு இந்தப் பணியைச் செய்திருக்கின்றன என்பது மீளாய்வுக்குரியது.

தேசிய மட்டத்தில் மக்களால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைமைத்துவம் இல்லை என்பதுடன், ஒவ்வொரு இன, மத, சமூகக் குழுமத்திலும் கூட இதுதான் நிலைமையாகும். 'உங்களது அடுத்த தலைவர் யார்?' என்று கேட்டால் உடனடியாக விடையும் இல்லை.

ஒரு தலைமைத்துவம் என்பது, தன் மீதான பொறுப்பை சரியாக நிறைவேற்றுவது மட்டுமன்றி, தனக்கு அடுத்தடுத்த நிலைகளில் இரண்டாம், மூன்றாம் மட்ட தலைவர்களையும் உருவாக்க வேண்டும்.

மற்றையவர்கள் முன்னேற இடங்கொடுத்தால், தனது பதவிக்கு ஆபத்து வந்து விடும் என்று ஒருவன் அச்சப்படுவானாயின், அவன் தலைமைத்துவத்திற்கான தனது சொந்த தகுதியைச் சந்தேகப்படுகின்றான் என்பதே அர்த்தமாகும்.

சிறுபான்மை சமூகங்களைப் பொறுத்தமட்டில் தமிழர்கள், முஸ்லிம்களிடையே அரசியல் தலைமைத்துவங்கள் காலத்திற்குக் காலம் உருவாகின்ற போதிலும், முறையான தலைமைத்துவ அடுக்குகள் உருவாக்கப்படவில்லை. தலைமைத்துவச் சங்கிலித் தொடர் ஒன்றைக் காண முடியவில்லை.

இப்போது ஒட்டுமொத்த சமூகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் யார் என்பதும், இதற்கடுத்த தலைவராக வரவிருப்பவர் யார் என்பதும் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் திண்ணமாகத் தெரியாது. அது நடக்கும்போது பார்க்கலாம் என்ற தோரணையிலேயே எல்லோரும் செயற்படுகின்றனர்.

உதாரணமாக, தமிழர் அரசியலை எடுத்துக் கொண்டால் முன்னைய காலங்களில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களும், அதற்கடுத்த நிலை தலைவர்களும் இருந்தார்கள் எனலாம். தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், சம்பந்தன் என ஓரளவுக்கு ஒரு தலைமைத்துவச் சங்கிலி இருந்து வந்தது.

இரா.சம்பந்தனின் மரணத்திற்குப் பிறகு நிலைமைகள் மாறின. மாவை சேனாதிராஜா குறுகிய காலத்திற்கேனும் அந்த இடத்தில் இருப்பதற்கு இடமளித்திருக்கலாம். அது நடக்கவில்லை. இந்தப் பின்னணியில் தமிழர் அரசியலுக்குப் பல கட்சிகள், அணிகள். கட்சிக்குள்ளேயே பிரிவுகள் உருவாகியுள்ளன.

அடுத்த தலைவர் யார் என்பது சரியாக இனம் காணப்படாமையும், எல்லோருக்கும் பதவி, தலைமைத்துவ ஆசை ஏற்பட்டமையுமே இதனடிப்படைக் காரணங்கள் எனலாம்.

மலையகத்திலும் இதுதான் நிலைமையாகும். தொண்டமான், ஆறுமுகன், சந்திரசேகரன் ஆகியோரோடு அந்த தலைமைத்துவச் சங்கிலி தொடராமலேயே போய் விட்டதாகத் தோன்றுகின்றது. அதற்குப் பிறகு அடுத்த தலைமுறையில் பல அரசியல்வாதிகள் உருவாகினாலும், அவர்களால் மலையக தோட்டப்புற மக்களின் ஏக தலைவர்களாக வர முடியாமல் போயிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

தலைமைத்துவச் சங்கிலி விடயத்தில் முஸ்லிம் சமூகமே மிக மோசமான நிலையில் உள்ளது. இப்போது யார் தலைவர் என்று அறுதியாகக் கூறவும் முடியாது. அடுத்த தலைமுறையின் தலைவர்கள் யார் என்ற கேள்விக்கும் விடையில்லை.

குறிப்பாக முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் என்பது பிரத்தியேகமான முஸ்லிம் கட்சிகளின் அரசியலை மையமாகக் கொண்டதாகும். இதனை ஆரம்பித்து வைத்தவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆவார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நிறுவியதன் மூலம் தனித்துவ அடையாள அரசியலை மக்கள்மயப்படுத்தி அவர் வெற்றியும் கண்டார். அவர் தன்னைச் சுற்றி அறிவார்ந்தவர்களை வைத்திருந்து, தனக்குத் தெரியாத விடயங்களில் அறிவுரையைப் பெற்றுக் கொண்டார்.

சமகாலத்தில், தனக்குக் கீழே அடுத்த அடுக்கில் பல தலைவர்களை உருவாக்கினார். தனக்கு அடுத்த தலைவர் யார் என்பதை வெளிப்படையாக அஷ்ரப் அறிவிக்கவில்லை என்று சொல்வார்கள். ஆனால் சாடைமாடையாக சிலவற்றைக் குறிப்புணர்த்தியதாக கூறுபவர்களும் உள்ளனர்.

மர்ஹூம் அஷ்ரப் மு.காவின் தலைவராக இருந்தது 15 வருடங்கள்தான். 11 வருடங்கள் எம்.பியாக இருந்தார். இதில் 6 வருடங்கள் மட்டுமே அமைச்சராக இருந்தார். இப்போது இருக்கின்ற முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களது பதவிக்காலத்தை விட இது குறைவானதாகும். எனவே அவர் தனது அடுத்த தலைவர் யார் என்பதைப் பற்றி அறிவிப்புச் செய்யாதிருந்திருக்கலாம்.

மறைந்த தலைவர் தனக்குக் கீழே பலரை அடுத்த தலைவர்களாக உருவாக்கினார் என்பதை மறுக்க முடியாது. இவற்றுள் சிலர் அவரது மரணத்திற்குப் பிறகு பதவிகளை பெற்றுக் கொண்டனர். சிலர் ஒதுங்கி விட்டனர்.

2000ஆம் ஆண்டு அஷ்ரப் மரணித்த போது அடுத்த தலைவர் யார் என்ற தலைமைத்துவ நெருக்கடி ஏற்பட்டது. 'இவர்தான் தலைவர்' என்று உறுதியாக, ஏகமனதாக பிரேரிக்க முடியாத சூழ்நிலை இருந்தது. இது முஸ்லிம் அரசியல் வீழ்ச்சியடைவதற்கு மிக அடிப்படையான காரணம் எனக் கூற முடியும்.

இந்நிலையில், முதலில், பேரியல் அஷ்ரப் மற்றும் றவூப் ஹக்கீம் ஆகியோர் இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். பின்னர் சிறிது காலத்தின் பின்னர் ஹக்கீம் மு.காவின் தனித் தலைவராக அறிவிக்கப்பட்டார். பேரியல் அஷ்ரப் தேசிய ஐக்கிய முன்னணியை முன்கொண்டு சென்றார்.

இது நடந்து 25 வருடங்கள் சென்று விட்டன. உலக ஒழுங்கும் நாட்டு அரசியலும் வெகுவாக மாறியிருக்கின்றது. இக்காலப்பகுதியில் பல முஸ்லிம் தலைவர்கள், முஸ்லிம் கட்சிகள் உருவாகியிருக்கின்றன.

ஆனால், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில், அபிலாஷைகளை வென்றெடுப்பதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது மிகப் பெரும் கைசேதமாகும்.

மர்ஹூம் அஷ்ரப் ஸ்தாபித்த முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெரிய கட்சியின் தலைவராக றவூப் ஹக்கீம் இன்று வரை இருக்கின்றார். ஏ.எல்.எம்.அதாவுல்லாவும், றிசாட் பதியுதீனும் 'காங்கிரஸ்களை' ஆரம்பித்துக் கிட்டத்தட்ட 20 வருடங்கள் ஆகின்றன. இன்னும் சில உதிரிக் கட்சிகள், அணிகளும் இருக்கின்றன.

தலைவர்களாக ஹக்கீம், றிசாட், அதாவுல்லா போன்றோர் மட்டுமன்றி, அடுத்த கட்ட தலைவர்களாகக் கருதப்பட்ட ஹிஸ்புல்லா, ஹரீஸ், அமீர்அலி, ஹசன்அலி, பசீர் உள்ளிட்டோர் முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றினார்களா இல்லையா என்பது நாம் வழமையாக முன்வைக்கின்ற கேள்வியாகும்.

இங்கு இன்னுமொரு கேள்வியும் உள்ளது. அதாவது இவர்களுக்குப் பிறகு முஸ்லிம் சமூகத்தின் அடுத்த அரசியல் தலைமைத்துவம் யார், அதற்கான தலைமைத்துவ சங்கிலி உருவாக்கப்பட்டுள்ளதா? என்பதை அவர்களோ சமூகமோ இன்னும் சிந்திக்கத் தொடங்கியதாகத் தெரியவில்லை.

ஏந்த முஸ்லிம் தலைவரும் தனது பதவியை விட்டுக் கொடுக்க தயாரில்லை என்பது யதார்த்தமாக நமக்குத் தெரிகின்ற விடயமாகும். அதேபோல, அவர்கள் தமக்குக் கீழே பல அரசியல்வாதிகளை வைத்திருக்கின்ற போதிலும் கூட, அவர்களை அடுத்த தலைவர்களாக வளர்க்கவும் இல்லை, முன்மொழியவும் இல்லை.

பதவி ஆசை பிடித்த, திரைமறைவில் டீல் பேசும் தளபதிகள் பலர் இருக்கின்றனர். இப்படியானவர்கள் தமக்கே குழிபறித்து விடுவார்கள் என்று தலைவர்கள் அச்சப்படுகின்றமையும் இதற்குக் காரணம் என்பதை மறந்து விடக் கூடாது.

மு.கா. தலைவர் றவூப் ஹக்கீம் தனக்குக் கீழே பலரை அடுத்த தளத்தில், இரண்டாம், மூன்றாம் நிலை தலைவராக வைத்திருந்திருக்கின்றார். ஒரு கட்டத்தில் மூன்றாம் நிலை தலைவர்களைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு இரண்டாம் நிலை தலைவர்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றினார் அல்லது அப்படியொரு சூழல் உருவாக்கப்பட்டது.

அதாவுல்லா தொடக்கம். ஹசன் அலி, பசீர் சேகுதாவூத் தொட்டு இப்போது ஹரீஸ், பைசால் காசிம் ஆகியோர் மு.காவில் இருந்து வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்ட விவகாரம் வரை எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் இது புரியும். இந்த வரிசையில்தான் இரண்டாம், மூன்றாம் அடுக்குகளில் வெற்றிடமான இடங்களுக்கு ஹிஸ்புல்லா. உதுமாலெப்பை, முசாரப் என இப்போது சிலர் மு.காவுற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இது ஹக்கீமின் ஒரு வகையான வியூகம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவர் அடுத்த தலைவர் யார் என்பதை அறிவிக்கவில்லை.

மக்கள் காங்கிரஸ் கட்சியில் தலைவர் றிசாட்டுக்கு அடுத்த அடுக்கில் பலர் இருந்தாலும் அவர்கள் அடுத்த தலைவர்கள் என்ற புள்ளியை நோக்கி நகர்ந்ததாகத் தெரியவில்லை. அத்துடன் கட்சிக்கும் அவர்களுக்கும் இடையிலான உறவு சில வருடங்களுக்குள்ளேயே முடிந்து விடுகின்றது. இதனால் கட்சித் தலைவரிலும் ஒரு எம்.பியிலும் தங்கியிருக்கின்றது.

தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா கிழக்கின் பல ஊர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவங்களைப் பெற்றுக்கொடுத்தார். ஆனால், அவர்கள் சில காலத்தின் பின்னர் முரண்பட்டுச் சென்றனர். இதனால் தேசிய காங்கிரஸ் கட்சி முற்று முழுதாக அதாவுல்லாவிலேயே தங்கியுள்ளது. அங்கு, இரண்டாம் நிலை தலைவர் என்ற ஒரு அடுக்கே இல்லை.

இந்த நிலைமைகள் மாற வேண்டும். ஒரு சமூகத்தின் இன்றைய தலைவர்கள் யார், அடுத்த தலைவர்கள் யார் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும். இது அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும்.



# மரணத்தின் மௌனம் கலைக்கும் செம்மணி

## புதிய அகழ்வாராய்ச்சியின் வெளிச்சம்”

டி.திலக்ஷன்
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்தின் செம்மணி ஒருகாலத்தில் அமைதியான விவசாயக் கிராமமாக இருந்தது. ஆனால், இன்று அதன் பெயர் மனிதப் புதைகுழிகளுடனும், காணாமல் போனவர்களின் கண்ணீருடனும் பின்னிப் பிணைந்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் வடுக்களைத் தாங்கி நிற்கும் ஆயிரக்கணக்கான கிராமங்களில் செம்மணியும் ஒன்று. எனினும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் போரின் இருண்ட பக்கங்களை உலகிற்கு எடுத்துக்காட்டியதுடன், நீதிக்கான ஒரு நீடித்த போராட்டத்தின் குறியீடாகவும் மாறியுள்ளன. அண்மையில், புதிய அகழ்வாராய்ச்சிகள் மூலம் மீண்டும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள உண்மைகள் மரணத்தின் மௌனத்தை உடைத்து, வரலாற்றின் பக்கங்களில் புதிய சோக அத்தியாயங்களைச் சேர்க்கின்றன.

### ஒரு கொடூரமான வாக்குமூலமும் ஆழமான உண்மைகளும்

செம்மணியின் துயர வரலாறு 1998ஆம் ஆண்டில் வெளிச்சத்திற்கு வந்தது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இலங்கை இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ஷ அதிர்ச்சியூட்டும் வாக்குமூலத்தை அளித்தார். அவர் 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்த பிறகு பல தமிழர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதாகக் கூறினார். இந்தக் குற்றச்சாட்டுகள் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட அகழ்வாராய்ச்சியில் 15 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் 1996இல் காணாமல் போன இருவர் அடையாளம் காணப்பட்டனர். இந்த கண்டுபிடிப்புகள், அப்போதைய ஆட்சியில் நடந்த மனித உரிமை மீறல்களின் ஆழத்தையும், அப்பாவி பொதுமக்கள் அனுபவித்த துயரங்களையும் உலகறியச் செய்தன.
இது வெறும் 15 சடலங்களின் கதை மட்டுமல்ல, அது காணாமல் போன ஆயிரக்கணக்கானோரின் பிரதிபலிப்பு.

### நீதியின் நீண்ட பயணம்: தடைகளும் நம்பிக்கைகளும்

செம்மணி புதைகுழிகள் தொடர்பான வழக்கு இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு, ஏழு இராணுவ வீரர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இந்தக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது.
இது இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்காக இராணுவ வீரர்கள் தண்டிக்கப்பட்ட அரிய நிகழ்வுகளில் ஒன்றாகும். எனினும் இந்த நீதிக்கான பயணம் மிகவும் மெதுவாகவும் பல தடங்கல்களுடனும் நடைபெற்றது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முழுமையான நீதியும் காணாமல் போன தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையும் கிடைப்பதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International) போன்ற மனித உரிமை அமைப்புகள் செம்மணி குறித்து முழுமையான வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன.

இந்தச் சம்பவம் இலங்கையின் பொறுப்புக்கூறல் குறித்த சர்வதேச சமூகத்தின் கேள்விகளை எழுப்பியதுடன் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணைகளின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியது.

### புதிய அகழ்வாராய்ச்சியின் வெளிச்சம்: ஒரு முடிவில்லா துயரக் கதை

இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் செம்மணி சிந்துபாத் சுடுகாடு அருகில் மீண்டும் புதிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை இந்த துயரக் கதையின் புதிய கவலைக்குரிய அத்தியாயமாக அமைந்தது. யாழ் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வாராய்ச்சியில், இன்று (ஜூன் 29, 2025 நிலைவரப்படி) வரை பச்சிளம் குழந்தைகள் உட்பட 33 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த புதிய கண்டுபிடிப்புகள் மீண்டும் இலங்கை மற்றும் சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் இந்த இடத்தை ஒரு கூட்டுப் புதைகுழியாக அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதுடன் மேலதிக அகழ்வாராய்ச்சிக்கான கால அவகாசத்தையும் வழங்கியுள்ளது. சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட ஒவ்வொரு முறையும் தடயவியல் நிபுணர்கள், நீதிபதிகள் மற்றும் ஊடகங்கள் முன்னிலையில் சடலப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு, மாதிரிகள் டீஎன்ஏ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

காணாமல் போனவர்களின் உறவினர்கள், இங்கு கண்டெடுக்கப்படும் எலும்புக் கூடுகள் தங்களது அன்புக்குரியவர்களுடையதாக இருக்கக்கூடாது என்ற பிரார்த்தனையுடனும், அதே சமயம் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடனும் காத்திருக்கிறார்கள்.

இந்த புதிய அகழ்வாராய்ச்சிகள், செம்மணியில் இன்னும் பல உண்மைகள் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன என்பதையும், காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்கும் வரை இந்தப் போராட்டம் ஓயாது என்பதையும் தெளிவாகக் காட்டுகிறது. மனித உரிமைகள் தரப்பினரும், பாதிக்கப்பட்ட சமூகங்களும், இந்த புதிய அகழ்வாராய்ச்சிகள் சர்வதேச கண்காணிப்புடன் வெளிப்படையான முறையில் நடைபெற வேண்டும் என்றும், கண்டறியப்படும் ஒவ்வொரு தடயமும் நீதிக்கான பாதையை வகுக்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கின்றனர்.

செம்மணியின் முக்கியத்துவம்: ஒரு வரலாற்றுப் பாடமாக

செம்மணி மனித புதைகுழி சம்பவம் வெறும் ஒரு தனிப்பட்ட குற்றவியல் வழக்கு அல்ல. அது இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது நடந்த கொடூரங்களுக்கு ஒரு வலுவான எடுத்துக்காட்டு. இது போர்க்கால வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் வலியையும், அவர்களுக்கான நீதியின் அவசியத்தையும் வலியுறுத்தும் ஒரு வரலாற்றுப் பாடமாகும். செம்மணி, எதிர்காலத்தில் இத்தகைய அட்டூழியங்கள் நிகழாமல் தடுக்கவும் கடந்தகால தவறுகளில் இருந்து பாடம் கற்கவும் அவசியமான ஒரு நினைவுச் சின்னமாக திகழ்கிறது. இந்த புதைகுழிகள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை நிரந்தரமாக நினைவூட்டும்.

மரணத்தின் மௌனத்தை கலைத்து வெளிவரும் இந்த உண்மைகள், ஒருவேளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒருவித ஆறுதலை அளிக்கலாம். அத்துடன், இலங்கையின் போர்க்கால நீதி, பொறுப்புக்கூறல் தொடர்பான விவாதங்களை மீண்டும் உயிர்வித்திருப்பதுடன், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, கடந்தகால காயங்களை குணப்படுத்தும் ஒரு புதிய அத்தியாயத்திற்கான எதிர்பார்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

“செம்மணி, நீதி கிடைக்கும் வரை, அமைதி காணாது என்பதை உலகுக்கு மீண்டும் ஒருமுறை உணர்த்துகிறது.”





# 15 வருடங்களுககுப் பின்னர் மீண்டும் கூட்டணி

நடிகர் அஜித் நடிப்பில் பல சூப்பர் ஹிட் படங்களை இயக்கிய இயக்குநர் சரண், சுமார் 15 வருடங்கள் கழித்து மீண்டும் அஜித் படத்தை இயக்க தயாராகி உள்ளார்.

அஜித்தின் ‘காதல் மன்னன்’ திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமான சரண், ‘அமர்க்களம்’, ‘அட்டகாசம்’ ஆகிய படங்களை இயக்கியதுடன்,
2010ஆம் ஆண்டு ‘அசல்’ என்ற படத்தை இயக்கினார்.

இந்த நிலையில் கிட்டத்தட்ட 15 வருட இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் அஜித் படத்தை இயக்க உள்ளார்.
அஜித் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் ‘ஏகே 64’ படத்திற்கு பிறகு, இந்தப்படம் ‘ஏகே 65’ படமாக உருவாகும் என்று கூறப்படுகிறது.

சரண் சொன்ன கதை அஜித்துக்கு பிடித்ததாகவும், நடிப்பதாக அஜித் வாக்குறுதி அளித்திருப்பதாகவும் இதனையடுத்து, சரண் திரைக்கதையைத் தயார் செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. இயக்குநர் சரண் 2019 ஆம் ஆண்டு ‘மார்க்கெட் ராஜா எம்.பி.பி.எஸ்’ என்ற படத்தை இயக்கினார். பிக் பாஸ் ஆரவ் நடித்த இந்தப் படம் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை.



# மீண்டும் இணையும் ‘பிரேமம்’ கூட்டணி

2015ஆம் ஆண்டு வெளியாகி கொண்டாடப்பட்ட படம் ‘பிரேமம்’. இதற்குப் பிறகு அல்போன்ஸ் புத்திரன் இயக்கிய ‘கோல்ட்’ படம் பெரும் தோல்வியை தழுவியது. இதனையடுத்து, பல்வேறு நடிகர்களிடம் அடுத்த படத்துக்கான கதைகள் கூறிவந்தார் அல்போன்ஸ் புத்திரன்.

தற்போது அல்போன்ஸ் புத்திரன் கதையில் நிவின் பாலி நடிப்பது உறுதியாகி இருக்கிறது. இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

இந்தக் கூட்டணி மீண்டும் இணைவது ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கி இருக்கிறது.

அல்போன்ஸ் புத்திரன் இயக்கத்தில் நிவின் பாலி, சாய் பல்லவி, அனுபமா பரமேஸ்வரன், மடோனா செபாஸ்டின் உள்ளிட்ட பலர் நடிப்பில் முழுக்க காதலை மையப்படுத்தி வெளியான வெளியான ‘பிரேமம்’ படத்தின் பாடல்கள் தற்போதும் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# ஸ்ரீலீலா விலகல்

முரளி கிஷோர் இயக்கத்தில் அகில் அக்கினேனி, ஸ்ரீலீலா நடிப்பில் தொடங்கப்பட்ட ‘லெனின்’ படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது. மேலும், அதிலிருந்து அகில் பிறந்த நாளுக்கு டீஸர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், திகதி பிரச்சினையால் இப்படத்தில் இருந்து விலகியிருக்கிறார் ஸ்ரீலீலா. ஸ்ரீலீலாவுக்கு பதிலாக பாக்யஸ்ரீ போஸ் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

ஸ்ரீலீலாவை வைத்து 3 நாட்கள் மட்டுமே படப்பிடிப்பு நடத்தியிருப்பதால், பெரிதாக பாதிப்பில்லை என்கிறது படக்குழு. ஸ்ரீலீலா ஏன் இப்படத்திலிருந்து விலகியிருக்கிறார் என்பது குறித்து விசாரித்த போது, பவன் கல்யாண் நடித்து வரும் ‘உஸ்தாத் பகத் சிங்’ படப்பிடிப்பு தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் ஸ்ரீலீலா தான் நாயகியாக நடித்து வந்தார்.

ஆனால், பவன் கல்யாண் அரசியலில் மும்முரமானதால் இதன் படப்பிடிப்பு நடைபெறவே இல்லை. தற்போது படப்பிடிப்பு தொடங்கப்பட்டு இருப்பதால், ‘லெனின்’ படத்திலிருந்து விலகி ‘உஸ்தாத் பகத் சிங்’ படத்துக்கு திகதிகள் ஒதுக்கிவிட்டார் ஸ்ரீலீலா என்கிறார்கள்.

நாயகியாக பாக்யஸ்ரீ போஸ் ஒப்பந்தமாகி இருப்பது குறித்துப் படக்குழு விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று முறை நூறாவது நாள்



அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்த படம், ‘டிராகன்’. இந்தப் படத்தின் நூறாவது நாள் விழா சென்னையில் நடந்தது. படக்குழுவினர் கலந்துகொண்டனர். படத்தில் பணியாற்றிய அனைவருக்கும் விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பேசிய நடிகர் பிரதீப் ரங்கநாதன், “இயக்குநர் அஸ்வத்தும், நானும் நண்பர்கள். அவர் ‘ஓ மை கடவுளே’ படத்தின் கதையை எழுதிக் கொண்டிருந்த போது ஒரு முறை என்னிடம், ‘இப்படி ஒரு கதாபாத்திரம் இருக்கிறது. அதில் நீ நடிக்கிறாயா?’ என கேட்டார். அதற்கு நான் ‘நடித்தால் ஹீரோவாகத் தான் நடிப்பேன்’ என்று பதிலளித்தேன்.

‘லவ் டுடே’ படத்தில் நடித்து முடித்த பிறகு, அஸ்வத்துக்குத் திரையிட்டுக் காண்பித்தேன். அப்போது அவரிடம் என்னை ஹீரோவாக வைத்து படம் இயக்குவாயா? எனக் கேட்டேன். காலம் கனியட்டும் என்றார். நாங்கள் இணைந்து பணியாற்றச் சிறிது கால அவகாசம் ஆகும் என நினைத்தேன். ஆனால் அதை ஒரே படத்தில் சாதித்துக் காட்டியது ரசிகர்கள் தான்.

‘டிராகன்’ படத்தை இயக்கியதற்காக அஸ்வத் மாரிமுத்துவுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நடித்தால் ஹீரோவாகத் தான் நடிப்பேன் என்று என் மீது நான் வைத்த குருட்டு நம்பிக்கை ரசிகர்களின் ஆதரவால் ஈடேறியது.

‘கோமாளி’, ‘லவ் டுடே’, ‘டிராகன்’ என என்னுடைய தொடர் மூன்றாவது நூறு நாள் திரைப்படம் இது. மகிழ்ச்சியாக இருக்கிறது. இதில் ‘டிராகன்’ படத்தின் வெற்றி முக்கியமானது.

ஏனெனில் ‘கோமாளி’, ‘லவ் டுடே’ ஆகிய இரண்டு திரைப்படங்களின் வெற்றியின் காரணமாக ‘டிராகன்’ படத்துக்கான எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. இந்த வெற்றி மூலம் ரசிகர்கள் என்னை உயர்ந்த இடத்துக்கு அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அவர்களுக்கு என்றென்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன்” என்றார்.

இஸ்ரேல்

இஸ்ரேலின் கவனம்

# காசா பக்கம் திரும்பியது?

ஈரானுடன் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டதால், இஸ்ரேல், தனது கவனத்தை காசா பக்கம் திருப்பி உள்ளது.

இதையடுத்து, வடக்கு காசாவில் வசிக்கும் பாலஸ்தீனியர்கள் உடனடியாக மொத்தமாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

இதன்மூலம் ஹமாஸ் இயக்கத்தினர் மீது மிகப்பெரிய தாக்குதலை தொடங்க இருப்பது தெளிவாகிறது.

இந்த பின்னணியில், காசாவில் போர் நிறுத்தம் கொண்டுவரப்பட



வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தினரின் பிடியில் உள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ட்ரம்ப் பதவியேற்றவுடன் இஸ்ரேல்-ஹமாஸ் இடையே 8 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, மீண்டும் சண்டை தொடங்கியது. இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவர ட்ரம்ப் மேற்கொள்ளும் முயற்சி வெற்றிபெறவில்லை. இதற்கிடையே, வரும் வாரங்களில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா செல்வார் என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்த பின்னணியில், பெஞ்சமின் நெதன்யாகு மீதான ஊழல் வழக்கு விசாரணைக்கு ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா

கால அவகாசத்தை

## ‘நீடிக்கும் திட்டமில்லை’

“பரஸ்பர வரி விதிப்பை மேலும் சில காலத்துக்கு ஒத்திவைக்க வாய்ப்புள்ளதா?” என தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ட்ரம்ப், “கால அவகாசத்தை நீட்டிக்கும் திட்டம் இல்லை. அதற்குப் பதிலாக, நீங்கள் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய அனுமதி அளிக்கிறோம். நீங்கள் 20 சதவீதமோ, 40 சதவீதமோ அல்லது 50 சதவீதமோ வரி செலுத்த வேண்டியிருக்கும் என்று சம்பந்தப்பட்ட நாடுகளுக்குக் கடிதம் அனுப்ப உள்ளோம்” என்று தெரிவித்தார்.



வியட்நாம்

இறக்கை உரசியதால்

## 4 விமானிகள் நீக்கம்

வியட்நாமில் விமானங்களின் இறக்கை உரசியதால் 4 விமானிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



வியட்நாம் தலைநகர் ஹனோயில் நொய் பாய் விமான நிலையத்தில் டியன் பியன் நகருக்கு ஏ-321 என்ற விமானம் புறப்பட தயாராக நின்றுள்ளது.

அப்போது ஹோ சி மின் நகரத்துக்குப் புறப்பட்ட வியட்நாம் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் அங்கு நின்று கொண்டிருந்த ஏ-321 விமானம் மீது உரசியது. இதில் அந்த விமானத்தின் இறக்கை சேதமடைந்தது.

இதனையடுத்து இரு விமானங்களிலும் இருந்த 386 பேரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விமான போக்குவரத்துத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர். இதில் ஏ-321 என்ற விமானம் ஓடுபாதையில் சரியாக நிறுத்தப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக 4 விமானிகளை பணியிடை நீக்கம் செய்து வியட்நாம் எயார்லைன்ஸ் நிறுவனம் உத்தரவிட்டுள்ளது.

சூடான்

தங்க சுரங்கம் இடிந்து விழுந்ததில்

## 11 பேர் பலி; 7 பேர் காயம்

சூடானில், இராணுவம் கட்டுப்பாட்டில் உள்ள ரெட் சி மாகாணத்தின் ஹவ்ஈத் பகுதியில் அமைந்துள்ள தங்கச் சுரங்கம் இடிந்து வீழ்ந்ததில், 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சுரங்கத்தில், ஞாயிற்றுக்கிழமை(29) அன்று தொழிலாளர்கள் தங்கத்தை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதன் போதே, சுரங்கம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவத்தில் சுரங்கத்தில் வேலை செய்துகொண்டிருந்த 11 பேர் உயிரிழந்தனர். மேலும், 7 பேர் படுகாயமடைந்தனர்.



இந்தியா

இந்தியா–அமெரிக்கா இடையே

## 8இல் வர்த்தக ஒப்பந்தம்?




இந்தியா- அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் வரும் 8ஆம் திகதிக்குள் அறிவிக்கப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கூடுதல் வரி விதிப்புக்கான கால அவகாசம் 9ஆம் திகதி நிறைவடைய உள்ள நிலையில், அதற்கு முன்பாகவே 8ஆம் திகதிக்குள் இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயம், வாகனங்கள், மருந்து, தொழிற்சாலைகள் சார்ந்த பொருட்கள் மீதான வரிகள் குறைக்கப்பட்டு அந்த துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஒடிசா

போராட்டக்காரர்களின்

## கால்களை உடைக்க உத்தரவிட்ட அதிகாரி

ஒடிசா மாநிலம் புரி ஜெகநாதார் கோவில், ரத யாத்திரை கூட்ட நெரிசலில் சிக்கி 3 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக மாநில முதலமைச்சர் மோகன் சரண் மாஜியை கண்டித்து அவரின் வீட்டின் முன் காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போராட்டத்தைத் தடுக்க அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டுத் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு பாதுகாப்புப்பணியிலிருந்த பொலிஸ் கூடுதல் ஆணையர் நரசிங்கா போலொ சக பொலிஸாருக்கு அதிரடி



உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பேரிகேட் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ள பகுதியை ஆய்வு செய்த கூடுதல் ஆணையர் நரசிங்கா போலொ, பேரிகேட் தடுப்புகளைத் தாண்டி போராட்டக்காரர்கள் யாரேனும் வந்தால் அவர்களைக் கைது செய்ய வேண்டாம். அவர்களின் கால்களை உடையுங்கள். போராட்டக்காரர்களின் கால்களை உடைப்பவர்கள் என்னிடம் வந்து பாராட்டை பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

அவர் பேசும் வீடியோ தற்போது வைரலான நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யவே உத்தரவிட்டேன் என்று பொலிஸ் உயர் அதிகாரி நரசிங்கா தெரிவித்துள்ளார்.

கழக உலகக் கிண்ணத்திலிருந்து

# வெளியேற்றப்பட்ட மெஸ்ஸியின் இன்டர் மியாமி

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து லியனல் மெஸ்ஸியின் இன்டர் மியாமி வெளியேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் அத்லாண்டாவில் ஞாயிற்றுக்கிழமை (29) அன்று நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து ஐக்கிய அமெரிக்க கழகமான மியாமி வெளியேறியது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக ஜோவா நேவிஸ் இரண்டு கோல்களையும், அஷ்ரஃப் ஹக்கிமி ஒரு கோலையும் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, புளோரிடாவில் திங்கட்கிழமை(30) நடைபெற்ற பிரேஸிலியக் கழகமான பிளமெங்கோவுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிப் போட்டிக்கு ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கழகமான பயெர்ண் மியூனிச் தகுதி பெற்றது.



மியூனிச் சார்பாக ஹரி கேன் இரண்டு கோல்களையும், லியோன் கொரெட்ஸ்கா ஒரு கோலையும் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. பிளமெங்கோ சார்பாக ஜெர்சன், ஜோர்ஜினியோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

ஒஸ்திரிய குரான் பிறீ:

## வென்றார் நொரிஸ்




ஒஸ்திரிய குரான் பிறீயில் மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் வென்றார்.

ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற பந்தயத்தை முதலாமிடத்திலிருந்து ஆரம்பித்த பிரித்தானியாவின் நொரிஸ் வென்ற நிலையில், பந்தயத்தை மூன்றாமிடத்திலிருந்து ஆரம்பித்த அவரின் சக மக்லரென் ஓட்டுநரான ஒஸ்கார் பியாஸ்திரி இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்த பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் பியாஸ்திரி 216 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் காணப்படுகின்றார்.



## பாகிஸ்தானின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக அஸார்

பாகிஸ்தானின் டெஸ்ட் போட்டிகளுக்கான பதில் தலைமைப் பயிற்சியாளராக அஸார் மஹ்மூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது நடப்பு ஒப்பந்த முடிவு வரையில் அஸார் பணியாற்றுவார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதில் தென்னாபிரிக்கா, இலங்கைக்கெதிரான தொடர்கள் உள்ளடங்குகின்றன.

கடந்த 2024ஆம் ஆண்டு ஆரம்பத்தில் தற்காலிக அடிப்படையில் நியூசிலாந்து சுற்றுப்பயணத்துக்கு முன்பாக நியமிக்கப்பட்டதிலிருந்து பாகிஸ்தானின் உதவிப் பயிற்றுவிப்பாளராக அஸார் இருந்து வருகிறார்.

ஜேஸன் கிலெஸ்பி தனது பதவிக் காலத்தில் ஆறு மாதங்களில் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, தென்னாபிரிக்காவுக்கெதிரான சுற்றுப் பயணம் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான தொடரில் தற்காலிகமாக ஆகிப் ஜாவீட் பணியாற்றியிருந்தார்.

## சாதுலியா மாணவர்களுக்கு சீருடை அன்பளிப்பு

*எச்.எம்.எம்.பர்ஸான்*

பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலய ஓட்ட வீரர்களுக்கு சீருடை அன்பளிப்பு செய்யும் நிகழ்வு திங்கட்கிழமை (30) அன்று இடம்பெற்றது.

மாணவர்களின் நலன்கருதி ஒரு தொகை சீருடைகளை வாழைச்சேனை வர்த்தக சங்க தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ். றபீக் அன்பளிப்பு செய்துள்ளார்.

சீருடையை அன்பளிப்பு செய்த றபீக்குக்கு பாடசாலை அதிபர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.



சிம்பாப்வேவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில்

## 216 ஓட்டங்கள் முன்னிலையில் தென்னாபிரிக்கா



சிம்பாப்வேவுக்கு எதிரான முதலாவது டெஸ்டின் இரண்டாம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா 216 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், புலவாயோவில் சனிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் முதல் நாள் முடிவில் தாம் பெற்றிருந்த 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 418 ஓட்டங்கள் என்றதுடன் தமது முதலாவது இனிங்ஸை தென்னாபிரிக்கா இடைநிறுத்தியிருந்தது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே, கோடி யூசுஃப் (3), அணித்தலைவர் கேஷவ் மஹராஜ் (3), வியான் முல்டரிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. ஷோன் வில்லியம்ஸ் 137, அணித்தலைவர் கிரேய்க் எர்வின் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா, இரண்டாம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 49 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் முல்டர் 25, டொனி டி ஸொர்ஸி 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கமாலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை தனக சிவங்கா வீழ்த்தியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 01, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.